


# பயணமும் பதிவுகளும்

--- ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா




பதிவு 001:

ஒவ்வொரு முறை கன்னியாகுமரிக்கு செல்லும்போதும் மனது தன்னையும் அறியாமல் சூரிய உதயத்தினை நினைத்து பார்க்கிறது. ஏன் எப்போதுமே எல்லைக் கோடுகள் நம்மை வசீகரிக்கின்றன ? மனிதர்கள் இல்லா பகுதி என்பதால் தானோ ? இந்தியாவின் தென் ஆரம்பப் புள்ளியாக இருக்கும் கன்யாகுமரியில் மனது ஒரு விதமான தேடலை, மகிழ்வை, ஏதோ ஒன்றை சாதித்த சாதிக்க போகும் உணர்வை தானாகவே அடைகிறது.

நாகேர்கோவிலில் எனது நண்பர் Heno Devasingh எனக்கான தங்குமிட ஏற்பாடுகளை செய்திருந்தார். ஹெனோ ஒரு அருமையான மனிதர். வழக்கமான ஏன் எதற்கு கேள்விகளில் இருந்து விலகி, பார்வைகளாலும் தோழமையினாலும் தன் இருப்பை உணர வைப்பவர்.

வெளி வேலையாக அவர் கொச்சின் சென்ற போதும் அவர் செய்த ஏற்பாடுகள் எனக்கு பெரிய உதவியாக இருந்தது. அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

அதிகாலை நானும் எனது மனைவியும் கன்னியாகுமரி நோக்கி புறப்பட்டோம். சரியாக ஆறிலிருந்து ஆறரைக்குள் சூரிய உதயம் வந்து விடுவதால் அதற்க்கு முன் அங்கே இருக்க வேண்டியது முக்கியம் என்பதால் ஐந்து மணி இருபது நிமிடங்களில் எங்களின் பயணம் ஆரம்பமாகி விட்டது. என் மனைவி எனக்கொரு சிறப்பான துணை. பயணங்களில் எனக்கு இணையாக வேகமாக தயாராகி விடுவாள். நல்ல பாடல்களை தேர்வு செய்து சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் பாடச் செய்யும் போது ... பயணம் ஒரு இனிமையான ஓவியமாக மாறுகிறது. சரியாக சூரிய உதயத்தின் போது கன்னியாகுமரியை அடைந்தோம். நாகர்கோவில் கன்னியாகுமரி வழியினை ஒவ்வொருவரும் அதிகாலை வேலையில் சென்று பார்க்க வேண்டும். சுற்றிலும் மலைகளும், வெண் மேகங்களும், சாலை அருகாமை நீர்நிலைகளும், பச்சை வயல்களும், வெண் காற்றாலைகளும்... கிட்டத்தட்ட ஒரு மென்மையான தேசத்தில் உலா வந்தது போன்ற உணர்வு அங்கே உருவாவதை தவிர்க்க முடியாது.

சாலையில் இருந்து ஒரு ஐந்து நிமிட நடையினில் சூரிய உதயத்தை பார்த்து விட முடியும். குறைந்த பட்சம் ஒரு ஐநூறு மனிதர்கள் அங்கே நிச்சயமாக இந்த தருணத்திர்க்காக உங்களுடன் உங்களுக்காக காத்து கொண்டிருப்பதை நீங்கள் உணர முடியும். விவேகனந்தரின் பாறையும், திருவள்ளுவர் சிலையும் சூரிய உதயத்துடன் ஒருங்கே பார்ப்பதை விட ஒரு பெரிய பாக்கியம் என்ன இருக்க முடியும் ? ஒருவர் வாழ்க்கை துறவி. இன்னொருவர் எழுத்து துறவி. இன்னொன்று சக்தி கொடுக்கும் துறவி. மூன்றும் ஒரே நிமிடத்தினில் பார்ப்பது தொடர்ந்து பயணிப்பவர்களுக்கு மட்டுமே சாத்தியம்.

## எப்போது கன்னியாகுமரிக்கு சூரிய உதயம் காண செல்ல போகிறீர்கள் ?

**Kanyakumari always attracts me towards it with the state of mind of watching the sunrise in the backdrop of Vivekananadhar rock and Thiruvalluvar statue. Why are we attracted to go to the borders of any country ? May be the other side doesn't have any human presence or may be the endless sight one can get to see ??? No clue but the Borders always a delight to watch. Kanyakumai stands as a Southern starting point of India and When I stand here I could feel a kind of search, happiness and a feel to achieve something new I never ever achieved.**

**I have a good friend Heno in Nagercoil - who takes care of arrangements every time I visit there. Heno is a unique personality and stands away from the usual 'who why what when and where' questions. Just by the sight of the eye and the density of friendship he understands the situation and does things accordingly. My heartiest thanks to him as I start my beautiful journey from here.**

**We started to Kanyakumari from Nagercoil in the early morning hours - 05.20 am. A 30 minutes beauitful drive along the riverbeds, green mountains, soft clouds on the top of mountains... Nagercoil stands as a unique place to be noted. My wife is a good companion in my travel, she gets ready before I start my ignition and plays songs according to mood - from melodies to fast beats. Blessed to have wife like that particularly in Trael - she sleeps rare and mostly never complains about any 'sudden changing' schedules.**

**Just a five minutes walk from the parking slot, you can easily watch the Sunrise. I am sure around 500 plus would be waiting to see the same along with you. Swami Vivenkanadha is a saint who lived his life to activate the used less minds of youth into useful minds. Thiruvalluvar, a writing saint, I can name him, through his Thirukkural has written the 'basics' of Life in a beautiful one and three by fourth lines. Sun, which I consider as a disciplined saint for it s 'regular' working style comes on time. All three saints at one place, in an early morning hours, presenting themselves to us is a blessed sight to have and to watch out. Only consistent travelers will have such blessings to collect it from Nature.**

**Such a beautiful place Kanyakumari. When are you planning to visit ?**




பதிவு 2:

Roshni Sharma - வடக்கு உத்தரப்பிரதேசத்தில் ஒரு சிறிய கிராமத்தினில் பிறந்த இந்த பெண்ணின் சாதனை பயணத்தை - கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை தனியொரு பெண்ணாக - இரு சக்கர வாகனத்தினில் பயணிப்பது - தொடங்கி வைக்கும் விழா தான் எங்களின் அடுத்த நிகழ்வு.

ரோஷ்ணி ஒரு மென்பொருள் பொறியாளர். பெங்களுருவில் பணிபுரியும் ரோஷ்ணி தனியாக பயணம் செய்வதில் நிபுணி. கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீருக்கு என்பது சாதாரண விடயமல்ல. இந்தியாவை ஒரு நேர்க்கோட்டில் பார்ப்பது வரை படத்தினில் எளியதாக இருக்கலாம். நடைமுறையினில் அப்படி அல்ல. ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதமாக காட்சி அளிக்கும். கன்னியாகுமரி, பெங்களுரு, ஹைதராபாத், நாக்பூர், ஆக்ரா, டெல்லி, மணலி, லெஹ் ... என்று ஒரு வானவில் போன்ற அனுபவமாக இந்த பயணம் அமையும். அப்படி

பயணிப்பதன் அவசியம் என்ன என்று அவரிடமே கேட்டேன் ... " ஒரு பெண்ணுக்கு இந்தியா பாதுகாப்பான நாடு அல்ல என்ற எண்ணம் உடைய வேண்டும். தனியாக என்னால் பதினோரு நாட்கள் பயணிக்க முடியும் என்றால் இது யாராலும் முடியக் கூடியதே. கற்பழிப்பை பற்றி ஒரு கருத்து இருக்கிறது. அது ஏதோ வீட்டிற்கு வெளியே நடப்பதாக சொல்கிறார்கள். அப்படி அல்ல. வீட்டிற்குள்ளும் எங்கேயும் அது நடக்கிறது. தைரியம் தான் தேவை, பாதுகாப்பான இடம் அல்ல. இந்த பயணம் நிறைய பெண்களுக்கு ஒரு கண் விழிப்பாக இருக்கும் என நம்புகிறேன் " என்றார். மொத்தம் கிட்டத்தட்ட மூவாயிரம் கிலோ மீட்டர்களுக்கு மேல். தனியாக. ஒவ்வொரு அசைவும் பதிவு செய்யப்பட வேண்டும். சாதனையாக மாறும்வரை கேலிக்கும் எச்சரிக்கைக்கும் உட்பட வேண்டும். சாதனையாக மாறிய பின் பணிவாக நடக்க வேண்டும். இப்போது இருக்கும் ரோஷ்னிக்கும் சாதனைக்கு பின் உள்ள ரோஷ்னிக்கும் அனுபவ உலக மாற்றம் நிறைய இருக்கும். கிட்டத்தட்ட ஒரு புதிய ரோஷ்ணியை அவர் கண்டு பிடிக்க கூடும். அவருக்கு எண்களின் வாழ்த்துக்களை தெரிவித்து பயணத்தை தொடங்கி வைத்தோம்.

சாதிக்கும் மனிதர்கள் கேள்விகளை கேட்பதில்லை. பதில்களை தருகிறார்கள். சாதாரண மனிதர்கள் கேள்விகளுடன் நின்று கொள்கிறார்கள். நீங்கள் என்னவாக இருக்க போகிறீர்கள் ?

**Roshni, a software engineer is from a middle class family in North Uttar Pradesh. After seeing the sunset, we reached the Southern starting point of NH, in Kanyakumari - just to flag off her 'Kanyakumari to Kashmir' solo bike expedition. After completion, this becomes a First ever woman to achieve this feat & comes in Limca book of records.**

**Riding in a bike, solo, from Kanyakumari to Kashmir is not an easy travel. One has to cross the multi states of India, face the multi cultures, unexpected situations and the changing climate. For a sample in Madhya Pradesh, the temperature will be huge and in Leh it will be the coldest. I asked her the idea**

**behind this journey and she replied... " Wanted to prove India still a safe country for female. People speak about Rape assuming that outside home is not a safe place but Rape happens inside home as well. Its all in the state of mind. If you take courage and brilliance together you can face any situation whether its outside or inside home. I just want to prove that Its possible to go out and ride anywhere in India. You will find good people and nature supporting your high intentions'.**

**Great people never prefers to ask questions. They answers. Ordinary people ask questions. Whom you want to be ?**




பதிவு 003:

உழைப்பை போல் ஒரு அருமையான உணர்வு இந்த உலகினில் எதிலும் இல்லை. இந்த பெண்மணியை சூரிய உதயம் பார்த்து விட்டு திரும்பும் போது பார்த்தேன். மணி ஏழு இருக்கலாம். தன் சாலையோர கடையை திறக்க தயாராகி கொண்டிருந்த போதுதான் பார்க்க நேர்ந்தது.

மஞ்சள் நிற தரைப் போர்வையை விரித்து, அதில் தான் விற்க வைத்திருக்கும் பொருள்களை அடுக்க தயாராகி கொண்டிருந்தார். பல வண்ண நிறங்களில் அவரின் உடையும், அது தவழ்ந்து வந்து விழுந்த தொனியும் ஒரு ஓவியம் போல் எனக்கு தெரிந்தது. அந்தப் பெண்மணியின் முகத்தை நான் கடைசி வரை பார்க்கவில்லை, பார்க்க முடியவில்லை அல்லது பார்க்க இயலவில்லை.

உழைப்பை நம்பி, பிழைப்பிற்காக வெளி மாநிலம் சென்று வாழ்பவர்களை பார்த்திருக்கிறீர்களா ? சாலையோரமாய் தள்ளு வண்டிகளில் அல்லது சிறிய குடிசைகளில் வாழ்ந்து கொண்டு தன் திறமையையும் உழைப்பையும் மூலதனமாகக் கொண்டு, விற்பனையை எதிர்பார்த்து, குடும்பமாக வாழ்வதற்கு என்ன ஒரு சகிப்பு தன்மை வேண்டும் ? ! மொழி தெரியாது. ஆனால் கற்றுக் கொள்கிறார்கள். கலாசாரம் புரியாது. ஆனால் உணர்ந்து கொள்கிறார்கள். மெதுவாய் பேசுகிறார்கள். சிரிப்பை கொண்டு மற்றவர்களுடன் கலக்கிறார்கள். நிறைவாய் வாழ்வதாய் சொல்கிறார்கள்.

**Hard work and skills, if used properly, becomes a beautiful connecting tool to live life happily wherever you are. When I was coming back after seeing the Sunrise in Kanyakumari I saw this lady. She was preparing for her day's sale.**

**She was using a yellow Tarpaulin as a base on the floor to place her materials which are ready for sale.**
**The way she was placing all those materials was a beauty as she adds perfection for every placing. She was wearing a colorful dress which was falling just like a painting. In fact, the dress was the one that caught my attention and directed me to take this picture. I was unable to see her face, I never wanted to as well. The view was so poetic and I felt this itself enough.**

**Have you seen people from other states coming to different states and selling materials like this - mostly made by their hand work ? The challenges are huge for them as the entire family is on the move, in an unknown language territory, unknown cultured people and unexpected situations. Still, they learn the basics of new languages, understands the importance of cultures and faces the unexpected challenges. Above all, they say, they live happily. Interesting people !**




பதிவு 004:

சாலையோரம் விற்கப்படும் பொருள்களில் சில, அழகான வேலைப்பாடுகளுடன், அமைவதை பார்த்திருக்கிறேன். பகவதி அம்மன் கோவில் தெருவில் நடந்த போது நான் பார்த்த விசிறி இது. நுணுக்கமாக செய்யப்பட்ட இந்த விசிறியின் அழகு அதற்க்கு பூசப்பட்ட வண்ணத்துடன் சேர்ந்து அழகாக இருந்தது. விற்பனையாளரின் அனுமதியுடன் ஒரு புகைப்படம் எடுத்தேன்.

மனிதன் தன்னை நம்பும் போது தயாரித்த பொருள்களில் இதுவும் ஒன்று. இயந்திரத்தை அதே மனிதன் நம்ப ஆரம்பித்ததும் இந்த விசிறிகள் காணாமல் போனது உண்மைதான். என் சிறிய வயதினில் தாத்தா ஒரு சாய்ந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு விசிறியால் தன்னை குளிர் நிலையில் வைத்து இருப்பதை பார்த்திருக்கிறேன்.

விசிறியின் பக்கவாட்டு அசைவும், அதிலிருந்து வரும் மெல்லிய காற்றும், அழகான மென் சத்தமும் என்னை அதிசயப்பட வைத்திருக்கின்றன. கை வளைக்கும் போது இடது கைக்கு அவர் மாற்றிக்கொண்டு விசிறிக் கொள்வார். அந்த கையும் வலிக்கும் போது என்னை கூப்பிட்டு விசிறச் சொல்வார். அதற்காக காத்து கொண்டிருந்த காலங்கள் அந்த நாட்கள். இயற்கையோடு நான் இணைந்து வாழ்ந்த நாட்கள் அவை. இன்று தாத்தாவும் இல்லை. விசிறியும் இல்லை. வருத்தமாக இருந்தாலும் வாழ்க்கையை அதன் போக்கிலேயே எடுத்து கொள்வதால் இந்த விசிறிகளை ரசிக்க முடிகிறது... !

**It was when coming back, after seeing the Sunrise, I saw this Hand fan material on the road side shop. Many times I see beautifully crafted materials on the road side with proper color combo. With the permission of the seller, I captured this picture.**

**Human beings, when they believed in themselves, they produced many supporting materials - and - hand fan is one such. Its sad to know that the same human beings, after started to believe and invest in machines, these hand crafted hand fans got disappeared. Hand fan is such a nice simple tool. Just operate horizontally left to the right, you will find a handful of air touching your face and disappears. I have seen my Grandpa doing that. He sits in that easy chair, uses this hand fan to keep the temperature of his body in a cool state. The horizontal movement, the mild air produced because of that movement, the 'sssh - ....... - sshh' kind of a mild sound ... all brings a kind of wonder feel to me in those days. He uses the right hand for few minutes and when pains, he exchanges the hand fan to the left hand. When he finds the pain in the left hand as well, he calls me to do the same with my hands. I used to wait for his call. Those days are precious. I as living with Nature completely. Today Grandpa is no more and so is the Hand fan. Feeling sad for both their absence but life has to be taken in it's flow which makes me to love the 'hand fan' even today.**




பதிவு 005:

நாகர்கோயில் ஒரு அருமையான பகுதி. மலைகளும், பசுமையான வயல்களும், நீர்நிலைகளும், கடல் பகுதிகளும், காற்றாலைகளும், மலை சார் மேகங்களும் கலந்த தனித் தன்மையான பகுதி. குறுகிய ஆனால் அழகிய தெருக்கள் நிறைந்த பகுதி. நிறைய நீர்வீழ்ச்சிகளும், வனம் சார்ந்த பகுதிகளும் நிறைந்த பச்சை மண் பகுதி. கன்னியாகுமரி செல்லும் நிறைய மனிதர்கள் நாகர்கோவிலை விட்டு விடுகின்றனர். நான் ஒவ்வொரு முறையும் நாகர்கோவிலில் தங்கி கன்னியாகுமரி செல்கிறேன். ஏதேனும் ஒரு புது பகுதியை பார்த்து விட்டு தான் வருகிறேன். காளிகேசம் என்று ஒரு பகுதிக்கு சென்று இருந்தேன். அருமையான அமைதியும், பசுமையான நிலப்பரப்பும், குளிர் சார்ந்த சூழ்நிலையும் -அந்த இடத்தினை விட்டு வரவே மனது தயங்கியது. பூவார், திற்பரப்பு அருவி, குளச்சல், முட்டம் கடற்கரை... எத்தனை அழகான கடலும் கடல் சார்ந்த பகுதி இது !

இருக்கும் இடத்திற்கு அருகிலேயே நிறைய பகுதிகள் இப்படி இருக்கின்றன. நாம் தான் தேடுகிறோம் என்ற போர்வையில் அருகில் உள்ளதை மறந்து போகிறோம். ஏன் நமக்கு தொலை தூர பகுதிகள் பிடித்து போகின்றன ? இக்கரைக்கு அக்கறை ஏன் பச்சையாக தெரிகிறது ? இக்கரைக்கு இக்கரை ஏன் பச்சையாக தெரிவதில்லை ? ஆச்சர்யம் தான் !

மதுரையில் இருந்து 240 கிலோ மீட்டர்கள் தொலைவினில், நான்கு மணி நேரத்தினில் நாகர்கோவிலை அடையலாம். தேசிய நெடுஞ்சாலை பயணத்தினை இன்னும் சுகமானதாக மாற்றுகிறது. ஆர்ய பவன் என்னும் சைவ உணவு விடுதியும், பிரபு எனும் அசைவ உணவு விடுதியும் இங்கே மிகவும் புகழ் பெற்றவை. ஒரு முறை செல்வோமா ?

Nagercoil is a beautiful place. Green paddy fields, Majestic mountains, soft clouds on the top of Mountains, small water streams, wind mills, water falls, dense forest region, narrow but beautiful streets... I still don't know why people miss this beautiful place when they reach Kanyakumari to see the Sunrise. Nagercoil is a place surrounded with so many places to be seen and experienced. Last time I went to Kalikesam - and - it was one of the beautiful places i ever visited. Poovar is another such place - where you can see the back water created mangrove forests. Thirparappu falls, muttom, kulachel... How many beautiful places are available here !

For people, the green side always appears on the other side. I wonder why their side itself never looks green to them. Why people move from one place to another place assuming that their places have nothing in it. Nagercoil is an equally beautiful location to any such locations In India.

Just 240 plus Kilometers away from Madurai, a four hours clean drive makes the place more beautiful. NH assists you for almost 217 Kms and remaining 23 kilometers is a single road. Aarya Bawan is a very famous hotel for Veg food and Prabhu is a famous destination for Non-Veg. Shall we go once ?




பதிவு 006:

சாதிப்பவர்களுக்கு வீட்டிற்குள் வீட்டிற்கு வெளியே என்றெல்லாம் ஒன்றுமில்லை. இங்கே நீங்கள் பார்க்கும் இருவரும் வெவ்வேறு உலகில் வாழ்பவர்கள். ரோஷ்ணி, இரு சக்கர வாகனத்தின் மூலம் உலகை தொடுபவர். தனப்ரபா தனது ஓவியங்களின் மூலம் உலகை தீண்டுபவர். ரோஷ்ணி பழைய நம்பிக்கைகளை தகர்த்து எறிபவர். தனப்ரபா இரு குழந்தைகளின் தாய், நல்ல மருமகள் என்ற பொறுப்பில் வாழ்பவர். ரோஷ்னிக்கு இந்தியா ஒரு பெரிய உலகமாக தெரிகிறது. தனப்ரபாவிற்கு உலகம் வீடும் ஓவியமாகவும் தெரிகிறது. ஒன்று புரிகிறது. சாதிக்க நினைப்பவர்கள் எங்கு இருக்கிறோம் என்பதை விட என்ன செய்கிறோம் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். பெண்மைக்கு புது இலக்கணங்களை வகுக்கும் இருவரும்

சொல்வது ஒன்று தான். திறமை எக்காரணம் கொண்டும் எங்கோ ஓரிடத்தில் மூழ்கக்கூடாது. திறமை வெளி வந்து உலகை சந்தித்து, அதன் மூலம் இந்த உலகை பார்ப்பது தான் பிறப்பின் பல காரணங்களில் ஒன்றாக இருக்க முடியும். உங்களின் திறமை வெளி வந்து விட்டதா ? நீங்கள் வீட்டிற்குள் இருக்கிறீர்களா அல்லது வெளியேவா என்பதல்ல கேள்வி ... உங்களின் திறமை வெளி வந்து விட்டதா என்பதுதான் கேள்வி... உங்களின் பதில் என்ன ?

Dhana Prabha and Roshni Sharma lives in a different world. Dhanaprabha, married, mother of two beautiful kids, has a special talent in painting. You can see her paintings in her fb page. She connects with this world through her paintings. On the other hand, Roshni lives on her bike, travels across India, meets different cultures, faces challenging situations and re-defines the way female lives. Both are right on their own way but important thing is they are not bothered about 'where' they live. Rather they choose to think on 'what' they do ! They both define to this world that Skill should come out and meet the world. They have done it. Have you done it ? Have you uncovered your skill irrespective of the place you choose to live - inside or outside house ?




பதிவு 007:

கன்னியாகுமரியில் இருந்து எழுநூறு சொச்சம் கிலோ மீட்டர்களில் தும்கூர் இருக்கிறது. காலை ஒரு எட்டு மணி அளவில் கன்னியாகுமரியில் புறப்பட்டால் இரவெல்லாம் வந்து விடலாம். அருமையான தேசிய நெடுஞ்சாலை உங்களின் பயணத்தை இன்னும் அழகு படுத்தும். பொதுவாக நெடுஞ்சாலை கொஞ்சம் வெறுமையாய் தெரிந்தாலும் நீண்ட தூரப் பயணம் என்று வரும் போது நெடுஞ்சாலை தான் அசதியை கொஞ்சம் தள்ளி வைக்கிறது. தும்கூரில் இரவு தங்கி காலை தும்கூர் - சித்ரதுர்கா - ஹோஸ்பெட் பயணத்தில், சித்ரதுர்கா தாண்டியதும் இந்த ஏரி வருகிறது. அங்கு பார்த்த காட்சியையும் சந்தித்த மனிதரையும் இங்கு பகிர்கிறேன்...

இந்தியா அழகான நகர் முகங்களை கொண்டு வரவேற்பது போல் தெரிந்தாலும் நிஜ இந்தியா இந்த மாதிரி

காட்சிகளில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவரிடம் பேச ஆரம்பித்தேன். " காலையில் எழுந்ததும் என் மாடுகளை இங்கே மேய்ப்பதற்காக கொண்டு வந்து விடுவேன். இந்த ஏரி எப்போதும் தண்ணீருடன் இருப்பதால் புற்களுக்கு பஞ்சமில்லை. மனைவி குழந்தைகள் பேரன் பேத்திகள் பார்த்தாயிற்று. வேறு தொழில் செய்ய பிடிக்கவில்லை. இந்த மாடுகள் எங்களுடன் ஒன்றிப் போய்விட்டன. எந்த சிரமமுமில்லை. சொந்த வீடு இருக்கிறது. நல்ல உணவு உண்கிறோம். உடைகளை தேவைக்கேற்ப அணிகிறோம். இதுவரை மருத்துவரை பார்த்ததில்லை. வாழ்க்கை அழகாக போய்க்கொண்டிருக்கிறது. நிறைவாக வாழ்கிறோம். நீங்களும் நிறைவாக வாழ்கிறீர்களா ?". அவர் கேட்ட கேள்வி எனக்குள் இன்னும் ஓடிக் கொண்டே இருக்கிறது. உங்களுக்குள்ளும் ஓடிக் கொண்டே இருக்கிறதா ?

வாழ்க்கையின் தேவைகள் மிகக் குறைவு. உணவு உடை இருப்பிடம் மிகப் போதுமானது. நம் தேவைகள் தான் மிக அதிகம். அதனால் தான் வாழ்க்கை புதிராகவும் பிரச்சனைகள் நிறைந்ததாகவும் இருக்கிறது என தோன்றுகிறது எனக்கு ! உங்களுக்கும் அப்படி தோன்றுகிறதா ?

**Start from Kanyakumari, travel 700 plus Kilometers, you will reach Tumkur. If we start by 08.00 am in the morning easily we can reach Tumkur by late evening or early night. Highway joins with you for the entire stretch of travel, though looking lonely, highway actually takes away the travel pain your body faces. Night stay in Tumkur brings a kind of refreshing mood for the next day. Tumur to hospet via Chitradurga is the next drive stretch and I faced this sight there after Chitradurga. A lake slightly higher than the road needs your 'come out of your car' approach to see it fully. There I met this man. I started speaking with him ... " I come here everyday early in the morning. All my cows and buffaloes will have their good grass food here as this lake keeps water all through the year. Married, wife, children, grand children ... have seen the life cycle. Never though about other work as this work gives me food, place to live, dress and**

**basics of life. I have an own house and we all as a family live happily. Have never seen doctor in my entire life. Everything goes well and life is beautiful.! We are happy and contented. Are you happy and contented ?"**
**That question is still ringing in my ear. Am I happy with my life? Am I contented with whatever I have got ?. Are you happy with your life? Are you contented with whatever you have got? Simple but powerful question!**

**It seems life has minimum needs and it is naturally beautiful. Its 'WE' create more needs and makes life into a troublesome one. The city India has lot of needs and seems like a confused wire mesh. The real and village India has less needs and lives like a peaceful feather flying on air. This is how I feel. Do you feel in the same way ?**





பதிவு 008:

சுரங்கங்களில் பயணிக்கும் போது ஏன் நாம் திடீர் மகிழ்வு கொள்கிறோம் ? பொதுவாக இருளை பார்த்து பயப்படும் நாம் - கும்மிருட்டில் தூரத்தினில் தெரியும் வெளிச்சப் புள்ளியை நோக்கி பயணிக்கும் போது ஒரு வித மகிழ்ச்சி உள்ளே உலவுவது ஏன் என்று இன்னும் புரியவில்லை. மகாராஷ்ட்ராவிலும், ஹிமாச்சல் பிரதேஷிலும்...இன்னும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் நிறைய சுரங்க பாதைகளில் பயணம் செய்திருக்கிறேன். ஒரு மலையினை குடைந்து கீழ்பகுதியை பயன்பாட்டிற்கும் மேல்பகுதியை பாதுகாப்பிற்கும் உபயோகப் படுத்தும் மனித அறிவினை பாராட்டியே தீர்க்க வேண்டும். பொதுவாக சுரங்கப் பாதைகள் ஒரு வித திடீர் அமைதியை உருவாக்குகின்றன. மின் வெளிச்சப்புள்ளிகள் அந்த அமைதியை இன்னும் அழகாக்குகின்றன. வாகனத்தின் சத்தம் தவிர மற்ற சத்தங்கள் தொலைந்து போகின்றதால் 'நானும் என் வாகனமும்' மட்டும் பயணிப்பது போல் ஒரு வித்தியாச உணர்வு என்னை ஆட்கொள்வது நிஜம். தூரத்தில் வெளிச்சம் தெரிய வரும் போது இனம் சுரங்கம் முடியப் போகிற இனம் புரியா வருத்தம் வருவது உண்மை. இருளை விரும்ப வைக்கும் சுரங்கங்கள் நம்மை திடீரென ஒரு புது உலகத்திற்கு கொண்டு சென்று திரும்ப யதார்த்த

**உலகத்திற்கு கூட்டி வருவது ஒரு சிறிய இன்ப பயணமாகத்தான் எனக்கு படுகிறது.**

**Tunnel driving brings an instant happiness inside - Reason ?. Darkness stands always against us is a belief we hold in our minds but certainly not in tunnels. Tunnels hold a different definition for darkness. They take our mind and car to a different world where only we and our car exist. We hear the beautiful sound of the car with an echoed effect. The light dots adds the value to the sight and the distant regular world light as a dot creates a beautiful feel within. Human brain is such a powerful tool which has cut the mountain in the middle, used one side of it for transport and other side of it for covered safety ! Tunnel drive reduces the speed, allows us to enjoy the drive and makes us to live inside the darkness for few seconds/minutes with all comfort. What a beautiful page of driving it is !**




பதிவு 009:

பெயர்: ஷந்தாரம்மா. வயது: 101 கணவன் : இல்லை குழந்தை : ஒரு ஆண் - கால்கள் இரண்டும் பக்கவாத பாதிப்பில் நடக்க முடியா நிலையில். வாழ்க்கை - பிச்சை எடுத்து வயிற்றினை நிரப்புவது.

ஷந்தாரம்மவிர்க்கு கண் பார்வை வயதின் காரணத்தினால் கிட்டத்தட்ட இல்லை. நான் பொதுவாக புகைப்படம் எடுத்தவுடன் அதை அவர்களிடமே காட்டும் பழக்கம் கொண்டிருப்பதால், ஷந்தாரம்மாவிடமும் காட்ட முற்பட்ட போது அருகில் இருந்தவர் சொன்னார் ... " அந்தம்மாவிற்கு பார்வை கிட்டத்தட்ட இல்லை ". ஷந்தாரம்மா பற்றிய மேற்சொன்ன தகவல்களையும் சொன்னவர் அவர் தான். என்னால் முடிந்த உதவியை செய்து விட்டு நடக்க

ஆரம்பித்த போதும் ஷந்தாரம்மா மனதிற்குள் வந்து கொண்டே இருந்தார்.

வாழ்க்கை வித்தியாசமானது. சிலருக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறது. ஆனால் நிறைவை தருவதில்லை. சிலருக்கு எல்லாவற்றையும் கொடுப்பதில்லை. ஆனால் நிறைவை கொடுக்கிறது. சிலருக்கு எல்லாவற்றையும் கொடுப்பதில்லை, நிறைவையும் கொடுப்பதில்லை. எல்லோருமே இந்த உலகத்தினில் தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஷந்தாரம்மா போன்ற மனிதர்கள் அவ்வப்போது வந்து நாம் வாழும் வாழ்கையின் சௌகர்யங்களை சொல்லி விட்டு போகிறார்கள். நம் குடும்பம் எவ்வளவு அதிர்ஷ்டமானது என்பதை புரிய வைக்கிறார்கள். நம் உடல் எவ்வளவு பெரிய பொக்கிஷம் என்பதை தெளிவு படுத்துகிறார்கள். நமக்கு கிடைத்து இருக்கும் வாழ்க்கை எப்படி ஒரு வரம் என்பதை புரிய வைக்கிறார்கள். எவ்வளவு வரமான வாழ்கை வாழ்கிறோம் நாம் ! காலையில் எழுந்ததும் எழுந்ததர்க்காக நன்றி சொல்வோம். பேச முடிவதற்காக நன்றி சொல்வோம். கைகள் கால்கள் ஒழுங்காக இயங்குவதற்காக நன்றி சொல்வோம். பார்க்க, கேட்க, உணர, சுவைக்க, நுகர முடிவதற்காக நன்றி சொல்வோம். கிடைத்த வீட்டிற்கு நன்றி சொல்வோம். கிடைத்த சாப்பாட்டிற்கு நன்றி சொல்வோம். கிடைத்த உடைக்கு நன்றி சொல்வோம். கிடைத்த வாகனத்திற்கு நன்றி சொல்வோம். அப்படி சொல்ல ஆரம்பித்தோம் எனில், அநேகமாய் திருப்தியுடன் வாழ்வோம் என எனக்கு தோன்றுகிறது. உங்களுக்கும் தோன்றுகிறதா ??

Name: Shantaaramma Age: 101 Husband: No more. Children: 1 - male - both legs are attacked by Polio and unable to move. Life style - Begs, fills stomach and moves forward.

Shantaaramma, due to her age factor has almost lost her eye sight. I have this habit of showing the face of people once I capture them in my camera. I did the

same to shantaaramma. But the person next to her told me that she has lost her eye-sight -almost. The same person told me all detials what I mentioned above.

Life is so unique. It never gives everything to everybody. For some, it gives everything but forget to give 'contentment'. For some, it never gives everything but gives 'contentment'. For some, it never gives everything & contentment together. Surprisingly we are all living here in the same earth, without any classification. People like Shantaaramma, comes to our eye sight often and conveys us the fortunate lifestyle we live, beautiful family we got, healthy body we hold and overall how blessed we are in this unique life. From today onwards, when we wake up, we can thank nature for waking up. When we are able to 'see', 'hear', 'sense', 'smell' and 'taste' we can thank nature for giving all senses in a working mode. We can thank nature, for giving a shelter to live. We can thank nature for the food we get to survive. We can thank nature for the dresses we collect to wear. I guess this 'thanking' sense will make us 'content' about whatever we have got till today and will guide to live the life in a happy mode. Shall we ?




பதிவு : 010

ஹம்பி ஒரு அருமையான நகரம் - அந்தக் காலங்களில். இன்று அது ஒரு கிராமம். தும்கூரில் இருந்து ஹம்பி செல்ல நான்கில் இருந்து ஐந்து மணி நேரம் ஆகிறது. ஒரு வழிச்சாலை என்றாலும் அழகான சாலை. தும்கூர் - சித்ரதுர்கா - ஹோஸ்பெட் - ஹம்பி ... சித்ரதுர்கா வரை தேசிய நெடுஞ்சாலையும், பிறகு ஒரு வழிச்சாலையும் ஆரம்பமாகிறது. சித்ரதுர்கா ஹோஸ்பெட் பகுதி வறண்டிருக்கிறது. கண்ணுக்கெட்டிய வரை சமவெளியாய் தெரிகிறது. அநேகமாய் விஜயநகர மக்கள் இவ்வழியே பயணித்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் துங்கபத்திரா நதி வழியாக பயணித்து ஹம்பியை அடைந்திருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் இவ்வளவு பெரிய சமவெளியை நான் பார்த்தது இல்லை. பார்க்கும்போது மகிழ்வாக இருக்கிறது. ஒரு தெருவிற்குள் அடங்கிப் போகும்

வாழ்க்கையில் இருந்து விலகி இப்படி ஒரு உலகம் பார்ப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. ஹோஸ்பெட் ஒரு சாதாரண ஊர். புழுதியும், ஒழுங்கற்ற போக்குவரதுமாய் நம்மை சந்திக்கிறது. அங்கிருந்து பதின்மூன்று கிலோ மீட்டரில் ஹம்பி நம்மை செக்க செவேல் ஏரியுடன் வரவேற்கிறது.

பொதுவாக வாழ்ந்து முடிந்த வீடுகள், அரண்மனைகள், சிற்பக் கோவில்கள், வீடுகள் உள் நுழையும் போது மனது கொஞ்சம் நிதானிக்கும். இங்கே தான் ஒரு கூட்டம், குழு, நாடு, மக்கள், மன்னர், அமைச்சர்கள், ராணுவம், போர், வழிபாடு, கொண்டாட்டங்கள், அழிவுகள் நடந்திருக்க கூடும் என்ற நினைப்பு நம் நடையை கட்டுப் படுத்துகிறது. எப்படி இருந்திருக்கும் இந்த இடம் சில நூறு வருடங்களுக்கு முன் ! விஜய நகரமும், அசோகரின் ஆட்சியையும் அமையப் பெற்ற ஓரிடத்தில் அனைத்தும் சிதிலமான நிலையில் பார்க்கும் போது மனதிற்குள் ஏதோ செய்கிறது. இப்படிதான் சில நூறு வருடங்களுக்கு பின் நாம் வாழும் இடங்களையும் வாழ்ந்த இடங்களாக மக்கள் பார்ப்பார்களோ என தோன்றுகிறது. எவ்வளவு பெரிய மன்னரானாலும் நாடானாலும் ஒரு நாள் முடிவுக்கு வரத்தான் போகிறது என்பதை ஹம்பி சொல்கிறது.

ஹம்பியை பார்க்க குறைந்த பட்சம் மூன்று நாட்கள் தேவைப்படலாம். நான் ஒரே ஒரு பகுதியை மட்டும் பார்ப்பது என முடிவு செய்தேன். விருபாக்ஷா கோவில் என்னை அழைத்தது.

விருபாக்ஷா கோவிலின் புகைப்படங்கள் பல இருந்த போதும் இந்த குளத்துடன் கூடிய பபுகைப்படத்தினை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த புகைப்படம் எடுத்த இடம் நான்காம் படிக்கட்டு பகுதி.. மீதமுள்ள மூன்று படிக்கட்டுப் பகுதியினை நீங்கள் புகைப்படத்தில் காணலாம். எந்த கணினியும் இல்லாக் கால கட்டத்தில் நேர்க்கோட்டில் படிய வைக்கப்படிருக்கும் படிக்கட்டுகள்

அந்தக் கால பொறியியலுக்கு எடுத்துக்காட்டு. குளத்தில் இருந்து பார்த்தால் கோவில் கோபுரம் திருப்பி வைக்கப்பட முக்கோணம் போல் அவ்வளவு அழகாக தெரியும் வகையான குல வடிவமைப்பு. துங்கபத்ரா நதியின் நீர் இங்கே அழகான குளமாக நிற்கிறது. அமைதி என்றால் அப்படி ஒரு அமைதி. இங்கே தான் மன்னர், மன்னரின் மனைவி, தோழிகள், மக்கள் அமர்ந்து இருக்க கூடும். வேண்டுதல் இந்த படிக்கட்டுகளில் நடந்திருக்கலாம். முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கலாம். காலம் தான் எவ்வளவு ரகசியங்களை காக்கிறது ? ! அநேகமாய் ஒவ்வொரு படிக்கட்டும் ஒரு கதையை வைத்துக்கொண்டு ஆனால் அமைதியாய் அமர்ந்து இருக்கிறது. கோவிலுக்குள் திருமணங்கள் நடக்கின்றன. சுப நிகழ்வுகள் நடக்கின்றன. மேள சத்தம் கேட்கிறது. வெளி நாட்டுப் பயணிகள் வாய் பிளந்து குளத்தினை பார்க்கிறார்கள். யாரோ ஒருவர் குளத்தின் நீல அகல ஆழ கணக்கெடுப்பில் மூழ்கி இருக்கிறார். ஆச்சர்ய விழிகளுடன் படித்தவர்கள் நின்ற வண்ணம் சிலிர்க்கிறார்கள்.

ஹம்பிக்கு ஒரு முறை சென்று வாருங்கள். இந்தியா நீங்களும் நானும் நினைப்பது போல் சாதரானமானது அல்ல எனப் புரியும்.

Hampi is a capital city in ancient times. Now its a below average village. From Tumkur, we can reach Chitradurga, then, hospet then, to Hampi. It takes 4 to 5 hours to reach Hampi from Tumkur. Tumkur to Chitradurga has National Highway. From Chithradurga to Hampi its a single road. This single road journey has a beautiful flat terrain both sides. I have never seen such a flat terrain - both sides of the road in my journeys. This is first time. We live in a single road, single home -circle life style. Suddenly when we expose to a flat terrain eye sight, something happens inside. t could be happiness or fear. Hospet is a dust filled, un-organized below average village. Crossing Hospet, with Red water filled lake, Hampi welcomes us.

**Generally heading inside those old forts, kingdoms, houses, temples brings a kind of halt within the flow of thinking. Mind rebuilds those days and imagines the happenings. This is the place where Kings would have ordered something, queens would have asked for something, ministers would have suggested something, people would have sold or bought something, war would have destroyed peace or war would have brought peace, Ashoka would have thought something and Krishnadevaraayaa would have collected something. Historical place within hundred years becomes nothing but a ruined building exhibition. Just imagining how our living places would be after hundred years ! Strange feeling parks in !**

**One certainly requires three to four days to have a complete look at Hampi. With the available one day, I decided to explore one place, only one - and - Virupaakshaa temple invited me.**

**There are hundreds of pictures of Virupaakshaa temple - to be discussed but I have selected one Picture - a pond within the temple that is connected with Tungapathraa river water. Three sides of steps you can see in the picture and the other side - fourth side - from where I have taken this picture. In those no computer calculator age, they fixed the steps of the pond with such a precision - straight and curvy - both measurements. Sample of the hereditary engineering minds of Indians. Silence and peace rules this pond and I am sure if you go and sit here for a while, you could hear your heart beat - easily. From the pond, the tower of the temple looks in perfect reverse triangle shape which exhibits the precise sketches those sculptures of kingdom of Ashoka and Krishnaraaya Devaraaya. Inside temple marriage happens. Lot of auspicious functions happens. Foreigners stands still by seeing the architecture works. Some clicks picture, see in the camera and looks back again with wonder eyes. One was calculating the length width and depth of the pond. Those who called themselves as educated and 'known' - stands simply stilled and keeping quiet.**

**Once, make a visit to Hampi. Then, you will come to know that India is not as simple as you and I think. Shall we ?**




பதிவு 011:

ஐஹோல் அநேகமாய் சிற்பக்கலை பயில்வதற்கான இடமாக இருந்திருக்க கூடும். எங்கு பார்த்தாலும் கோவில்களும் மண்டபங்களுமாய் இருக்கின்றன. இதை செய்த சிற்பிகள் எல்லாம் இப்போது இருக்க வாய்ப்பில்லை. புரிகிறது. ஆனால் அவர்களின் வழித் தோன்றல்கள் என்ன ஆனார்கள் ? கேள்விகள் மட்டும் தான் எதிரொலிக்கிறது. பதில்களை காணவில்லை.

நீங்கள் பார்ப்பது போல் பல சிற்பங்கள் ஐஹோலில் பரந்து கிடக்கின்றன. ஒரே கல்லில் எப்படி இவர்களால் இப்படி செதுக்க முடிந்தது ? கீழிருந்து சுமார் எட்டடிக்கு முழு வளைவு அலங்கார நீள் வட்ட செதுக்கல்கள். அதற்க்கு பின் மீண்டும் சுமார் எட்டடி அளவிற்கு இடைவெளி - தூண்களுடன் ! தூண்களுக்கும் உள்ளே இருக்கும் பாறைக்கும் இடையே நடப்பதற்கான அழகான இடைவெளி.

அதற்க்கு முன்பக்கமாய் படிக்கட்டுகள். மேல்புறம் மூடப்பட்ட அமைப்பு. அதற்கும் மேல் எட்டு கோண வடிவ கூம்பு அமைப்பு. யார் வரைபடம் வரைந்தது ? யாருக்கு இப்படி தோன்றியது ? எந்த கணினியும் இல்ல காலத்தினில் எப்படி இப்படி ஒரு 'முன்மாதிரி' வரைபடத்தினை தயாரித்திருக்க முடியும். கணினியே தேவை இல்லாமல் செய்ய முடியும் எனில் மனித மூளை கணினி கண்டறிந்த பின் மழுங்கி போய்விட்டதா ? அப்படி இல்லை எனில் ஏன் இந்த மாதிரி சிற்ப அமைப்புகள் பிற்காலங்களில் செய்யப் படவில்லை ? மனம் முழுக்க கேள்வி எறும்புகள் ஊர்ந்து கொண்டே இருக்கின்றன. பதில் சக்கரைகளை தான் காணோம் !

ஹம்பியும் ஐஹோலும் படாமியும் [ அடுத்து பார்க்க உள்ளோம் ] இந்திய மூதாதையர்களின் அறிவுச் சொத்துகள். இங்கே அசோகரும்,கிருஷ்ண தேவ ராயரும், சாளுக்கிய மன்னர்களும் எனக்கு தெரியவில்லை. மூதாதையர்கள் தான் தெரிகிறார்கள். இதை கட்டிய செதுக்கிய யாரோ ஒருவன் என் தாத்தன் பாட்டன் பூட்டன் வழியாக கூட இருக்கலாம். ஏன் - உங்களின் பாட்டன் பூட்டன் வழியாகக் கூட இருக்கலாம். இதை அழிக்க எத்தனையோ இனமும் போரும் முயற்சித்த போதும் இன்னும் இந்த அறிவுச் சொத்துகள் நெஞ்சு நிமிர்த்தி எழுந்து நிற்கின்றன. என் இந்தியா எனக்குள் ஒரு பெருமையை உருவாக்குவது இங்கே தான். நான் இந்தியன் என்பதில் பெருமைப்படுகிறேன். அதே நான் என் இறப்பிற்க்குள் காலம் கடந்து நிற்கும் ஏதோ ஒன்றை செய்ய நினைக்கிறேன். செய்வேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீங்களும் ஏதாவது செய்வீர்களா - நமது இந்தியாவிற்கு ?

ஒவ்வொரு சிற்பத்தை பார்க்கும் போதும் ஆச்சர்யத்தை தாண்டி சந்தோஷ அழுகை வருகிறது. இதுதான் இந்தியாவாக இருந்ததோ ? இந்த நாட்டின் மீது எந்த போரும் வரவில்லை எனில் இந்த நாடு எப்படி இருந்திருக்க கூடும் ?

ஏன் இது நடந்தது ? இதை நடந்தியவர்கள் என்ன சாதித்து இருக்கிறார்கள் ? எங்கே அவர்களின் பெயர்கள் எழுதப்பட்டு இருக்கின்றன ? அவர்களின் நாடுகள் இன்று என்ன நிலையினில் இருக்கிறது ? ஏன் அவர்களால் இது போல் சிற்பங்களை எழுப்ப முடியவில்லை ? அவர்களால் உடலைத் தான் வெற்றி கொள்ள முடிந்ததா ? அறிவு இன்னும் இங்கே தான் எங்கோ வாழ்ந்து கொண்டிருக்கிறதா ? ஒன்று மட்டும் புரிகிறது. இத்தனை சோதனைகளுக்கும் பிறகும் எழுந்து நிற்கிறதென்றால் இந்த இந்தியாவை இனி யாரால் என்ன செய்து விட முடியும் ?

**Aihole must have been a lab for sculpture related skills in those days. Wherever you see, temples, mahals and halls... this place is a amalgamation of skills & hard work @ one time, I guess. I understand those skilled sculptors are not available with us but what happened to their Generations ? Where are they? What happened to those wonderful irreplaceable skills ? Constant questions are jumping inside. Mute answers are the only answers.**

**As you see in the picture, there are lot of sculptured temples stands like immortals in and around Aihole. Lets focus on this one picture... How they sculptured such a big structure in one stone ? Up to 8 ft, they have oval shaped designs one on one, then for another 8 ft they have space but with pillars connecting the base and top side, between pillars and inner side edge, there is a healthy platform to walk around and steps to reach the platform ! Above that top cover, there is a 6 ft hexagonal temple tower with lots and lots of designs on it. No calculators and computers but just minds and calculations have made this wonderful design. Just imagine the 'Blue Print' of them in those days ! How effective and precise it would have been, without our present calculators and computers ! Without computing machines, if one can achieve this brilliance, why with all latest computing machines we never thought of achieving structures such ! Is it the arrival of computers and calculators have decreased our skill levels ? There are lot of questions moving like a stream of ants but unable to find the food answers. !**

**Hampi, Aihole and Badami are the intelligence properties of Indian ancestors. I was unable to notice King Ashoka, King Krishnadevaraaya or Chalukkiyaas here.**

**I am able to see the Intelligence and skills of Indian ancestors. When I sit next to these structures, I feel my Grand or Grand Grand fathers would have been a part of this making. Who knows ? Your Grand Grand fathers as well. I am proud of being an Indian. I am happy to see such monuments in my lifetime. I do want to do something that stands forever. I am sure I will do. Hope to meet you all there. Shall we ?**

**Seeing those ruined temples, I feel a kind of tears within. Possibly this was how India would have been ? If not wars, then, How India would have been ? Why wars on India ? Who did it ? What's the plan ? What they achieved by ruining all these structures ? Where are they ? How their country stands today ? Why they were unable to create such structures after they won the war ? Were they able to win over physical bodies only - not able to win the intelligence and skills within those physical bodies ? I can sense something. If with all these wars on it, still, when I see India stands like this, I strongly believe India can't be erased by anyone in the history of Earth. Do you believe so ?**




பதிவு 12:

பட்டாடக்கல் இன்னுமொரு அழகான சிற்ப வேலைப்பாடு நிறைந்த பகுதி. சாளுக்கிய மன்னர்களின் திறமைக்கான எடுத்துக்காட்டு. எங்கு பார்த்தாலும் சிவ லிங்கங்கள் உடைந்தும் உடையாமலும் கோவிலுக்குள்ளும் கோவிலுக்கு வெளியேயும் வீற்றிருக்கின்றன. சிவனின் இருப்பிடத்தை இமய மலையில் இருந்து குமரி வரை குஜராத்தில் இருந்து அஸ்ஸாம் வரை பார்த்திருக்கிறேன். சிவன் ஒரு கடவுளாக தெரிவதை விட இந்திய மக்களை ஒருங்கே இணைக்கும் ஒரு சக்தியாகத்தான் எனக்கு தெரிகிறார். இது எல்லா மத கடவுள்களுக்கும் பொருந்தும். கிட்டத்தட்ட இந்த புகைப்படத்தினை தரையில் அமர்ந்து எடுத்தேன். காரணம்... அப்போதுதான் முழுமையாக நான் விரும்பும் எல்லைக்குள் வருகிறது. ஒரு புகைப்படம் எடுக்க நான்

**இப்படி யோசிக்கும் போது இதைக் கட்ட எப்படி இவர்கள் யோசித்திருக்க வேண்டும் ?**

**இங்கே இவர்கள் தெளிவு படுத்துவது கட்டிடக்கலையை அல்ல. மனிதன் நினைத்தால் எந்த வசதியும் இல்லை என்றால் கூட எதையும் செய்ய முடியும் என்பது தான்.**

**Pattaadakkal is another example of Salukkiyaas sculpturing skills. Salukkiyaas connected with Lord Siva it seems. Wherever you see you can witness broken and unbroken Siva Lingams - inside and outside temples. I have seen Siva Lingams from Himalayaas to Kanyakumari - Gujarat to Assam. In all these areas, Lord Siva seems to be a connecting force, rather than a God - according to my observation. This observation suits all others Gods as well.**

**I was almost on the floor sitting, placing the camera very near to the ground level, just to take the picture as I wish. Imagine the calculations and har work they would have put to erupt these structures. I guess these structures are built exclusively not for temples or palaces. This was built to tell the world that if Human beings decide, even without facilities they can do anything. Anything means simply anything.**





பதிவு 013:

பதாமி குகை சிற்பம் எனக்கு தெரிந்த வகையினில் நான் பார்த்ததிலேயே மிகச் சிறந்த சிற்பமாக இருக்க கூடும். பட்டாடக்கல்லில் இருந்து பயணித்தால் ஒரு நாற்பது நிமிடத்தில் சென்று விடலாம். பதாமி ஒரு சிறிய மலையும் மலை சார்ந்த ஊர். அந்த மலைக்கு கீழ் பகுதியில் இஸ்லாமியர்களின் தர்கா கட்டப்பட்டிருகிறது. மலையின் மேற்புறம் புத்தருக்கான குகைக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. அருகில் தெரியும் இன்னொரு மலையின் மேல்புறம் இந்து கோவில் கட்டப்பட்டிருக்கிறது. எல்லாம் நன்றாகத் தான் இருந்திருக்கிறது அந்த நாட்களில். மதம் என்ற பெயரால் நாம் தான் கெடுத்து விட்டோம் என நான் உணர்கிறேன்.

புகைப்படத்திற்கு வருவோம். இந்த புகைப்படம் குகையின் உள்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டது. எந்த மென்பொருளும் இல்லாக் காலத்தில் வெளிச்சம் உள்ளே வர இலகுவாக தூண்களுக்கு மத்தியில் கொடுக்கப்பட இடைவெளியை பார்த்தால் நாம் கட்டிடக்கலையில் இன்னும் புதிதாக எதையும் செய்து விட வில்லை என தோன்றுகிறது. தூண்கலெல்லாம் இன்னும் ஆயிரம் வருடங்களுக்கும் அப்படியே தான் இருக்கும் போலிருக்கிறது. குகையின் உட்புறம் புத்தர் பல நிலைகளில் அழகாய் செதுக்கப்பட்டு இருக்கிறார். புத்தரை பார்க்கும் போது மனது ஏனோ தெரியவில்லை …ஒரு அமைதியை அடைகிறது. ஒரு இளவரசனால் யோகி நிலையை அடைந்து, தன வாழ்க்கைக்கு பின், மற்றவர்களையும் ஒரு நிமிட அமைதிக்கு தன் சிலையின் மூலம் கொண்டு வருவது இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த ஆச்சர்யமாய இருக்க கூடும்.

**In my experience, Badami Caves might be the best ever cave sculpture experience I ever had. Badami comes in 40 minutes drive from Aihole. Badami is a small village surrounded by mountains. When we reached Badami cave, which is on the top of a mountain, we saw a mosque just below the mountain and a hindu temple on top of the adjacent mountain. I guess everything was right on those days. Only we made confusions with religions in our days.**

**This picture is taken from the inner side of the caves. To get the light, see how beautifully they left the space between the artfully crafted pillars. Lot of Buddha statues are available inside and every Buddha statue brings a kind of peace within. Its amazing to see a Prince turned later into a complete Yogi, even through the statue can bring a kind of peace within us for around one minute is a big miracle !**




**பதிவு 014:**

## எல்லோராவில் இந்த பெண்மணியை பார்த்தேன். அவரிடம் பேசியதை கவிதையாய் கொடுத்திருக்கிறேன். மனிதர்களிடம் தான் கற்றுக் கொள்ள எவ்வளவு இருக்கின்றன !

**Saw this beautiful lady in Ellora. Whatever I spoke with her, I have written that in a Verse format below. We have lot more to learn from every human beings we come across !**

**Wrinkle lines represents my experiences...**

**Happy days moves forward with content...**

**Matured forehead reflects the message**

**Whatever happened has happened only for**
**my good future ....**

**My laughter has got the boldness**
**to invite the death which may come**
**either today or tomorrow...**

**From Those who were with me,**
**From Those who were once with me then parted,**
**From Those who helped and disappeared,**
**From Those who forget to help,**
**From those who forget my presence,**
**From all those learned the basic lessons of life ...**
**Do good, Be thankful and stay healthy !**

**Matured forehead reflects the message**
**Whatever happened has happened only for**
**my good future ....**

**Wrinkle lines represents my experiences...**




**பதிவு 015:**

**எல்லோராவில் இவரை பார்த்த போது கேட்டேன்... " எல்லோரா பற்றி என்ன நினைக்கிறீர்கள் ? ". அவரின் பதில் வித்தியாசமாக இருந்தது. " என் வயதில் எதுவும் செய்யாமல் இருந்ததை நினைத்து வருத்தப் படுகிறேன் ! ". சாதாரண விவசாயி அவர். எல்லோரா சிற்பங்களை பார்க்கும் ஒவ்வொருவரையும் இப்படித் தான் எல்லோரா நினைக்க வைக்கிறது. எல்லோராவிர்க்கு ஒரு முறை சென்று வந்தால் இந்தியாவை பற்றி இகழ்வாக பேசுவதை அநேகமாய் நிறுத்தி விடுவீர்கள். எல்லோராவின் புகைப் படங்கள் அடுத்து வரக் காத்திருக்கின்றன...**




**பதிவு 016:**

**எல்லோராவை பார்க்காமல் நீங்கள் இறக்கிறீர்கள் என்றால் இந்தியாவை புரிந்து கொள்ளாமல் இறப்பவர்களில் உங்களின் பெயரையும் சேர்க்க நேரிடும். ஒரு கோவில் கட்டுவது சிறப்பு என்றால் மலையை குடைந்து ஒரு கோவிலை உருவாக்குவதை ஏதோ ஒன்று என்று ஒதுக்க இயலாது.**

**சந்திரநந்தரி மலையை குடைந்து ராஷ்ட்றகுத வம்சம் இந்த நிலையான கட்டிட அமைப்பை செய்திருக்கிறது. மொத்தம் முப்பது நான்கு குகைகளில் சிற்பங்கள் செதுக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்றே ஒன்றை பார்க்கவே ஒரு நாள் ஆகும். புகைப்பட கலைஞர்கள் உள்ளே சென்றால் வெளி வர மிகவும் யோசிப்பார்கள்.**

**மலையை குடைந்து கைலாச நாதர் கோவில். கோவிலை சுற்றி நல்ல இடைவெளி. அதற்க்கு அடுத்ததாய் சதுர**

வடிவில் தூண்களுடன் கூடிய பார்வையாளர் அரங்கம். ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன் செய்த ஒரு கட்டிடக்கலை கண் முன்னே தெரிவதும், அதை அணு அணுவாய் ரசிப்பதர்க்குமே ஒரு பாக்கியம் வேண்டும்.

எனக்கு ஒரே ஒரு கேள்வி தான் மீண்டும் மீண்டும் எழுகிறது. எந்த வித மென்பொருள் இல்லா நாட்களில் இவர்களால் எப்படி இந்த துல்லியமான அளவுகளையும் அமைப்பையும் ஏற்படுத்த முடிந்தது? ஏன் இது தொடராமல் போனது ? இதை உருவாக்கியவர்களின் வழித் தோன்றல்கள் எங்கே சென்று மறைந்தார்கள் ? அவர்களை பின் வந்த மன்னர்கள் ஏன் மறந்து போனார்கள் ? கேள்விகள் மலையை அவர்கள் குடைந்தது போல் என்னை குடைய ஆரம்பிக்கின்றன.

வாழ்க்கை இந்த மாதிரி சாதனை சிற்பங்களை, கட்டிடங்களை பார்க்கும் போது வித்தியாசமாக மாறுகிறது. நாம் என்ன செய்திருக்கிறோம் என்ற கேள்வி வருகிறது. மூன்று படுக்கை அறை கொண்ட வீடுகளை வாங்கி விட்டால் ஏதோ சாதித்ததை போல் பேசுவதும், நடப்பதும், நிற்பதும், மனிதர்களிடம் இருந்து பிரிந்து செல்வதும், வானம் பார்த்து நடப்பதும்.... மனிதர்களுக்கு சாதிப்பதில் இருக்கும் சிந்தனை, சாதிப்பதின் அளவில் இருப்பதில்லை. தனக்கு முடிந்ததை செய்து அதை பெரியதாக கற்பனை செய்யும் நோயில் வாழ்ந்து மடிவதை போல் எனக்கு தோன்றுகிறது. இதைப் போல் ஒன்றும் செய்யவில்லை என்று நினைக்கும்போது நான் வாழ்ந்ததை நினைத்து எனக்கு பெருமைப்படும்படி ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை. நான் செய்தவை அடுத்த தலைமுறை வரை வருமா என்பதே எனக்கு தெரியவில்லை. அநேகமாய் என் பேரன் பேத்தி என்னைப் பற்றி பேசுவதே அதிசயமாக இருக்கக்கூடும்.

எல்லோராவிர்க்கு ஒரு முறை சென்று வாருங்கள். உங்களின் திமிர், அகங்காரம், ஆணவம், தன்முனைப்பு,

**தற்பெருமை ... அனைத்தும் அழிந்து போகும். அநேகமாய் எல்லோராவை பார்த்து விட்டு வெளி வரும்போது ஒரு புதிய மனிதனாய் வருவீர்கள். எல்லோரா செல்ல தயாராகிறீர்களா ?**

**If you die without seeing Ellora, you will be listed among those who faced death without experiencing the real beauty of India. Its not just an another Engineering excellence. Its something unique. In Chandranagari Mountain range, Rashtrakuta dynasty has made something extraordinary which crosses 1400 plus years. In all 30 plus caves, I took one full day to explore one cave. For Photographers, its a heaven next to their lenses.**

**One question come to my mind often... Those who made these beautiful engineering structures, where are their generations ? How the next Generation Kings missed the hereditary skill link ? How without all those software equipment, calculators and computers those skilled people made these cave structures ? The kailasayanaathar Temple stands as a Master-piece of their skills. Between temple and corridor there is a huge walking space where 400 plus can walk at the same time !**

**We purchase one three bed room house and stand away from the regular crowd with ego. We sit, walk, speak, behave and speak with full of ego - just because of purchase of a three bed room house. After seeing Ellora, I think, I haven't achieved anything in my life till today. Whatever I achieve at present, i guess, even my Grandchildren wont speak about it. Not even two Generations ! !**


**Visit Ellora once. When you come out of Ellora, you will be washed away by a Grand collection of Skills - which will remove your Ego completely. Yes. You will be a new person ! Are you ready to experience Ellora ?**




**பதிவு 017:**

**இந்த தூண்களை கொஞ்சம் கவனித்து பார்ப்போம் . ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டது. அளவுகளையும் நேர்த்தியையும் கவனித்து பார்த்தால் இப்போதுதான் செய்யப்பட்ட மாதிரி சிறப்பாக இருக்கிறது. எல்லோரா ஏன் சிறப்பானது என்று இப்போது புரியும் என நினைக்கிறேன்.**

**Just see the pillars. See the design and precision. Its as if built recently, though it was built 1300 years before. Possibly we will understand Why Ellora stands special in terms of Architecture.**





பதிவு 18:

**எல்லோரா என்பது ஏதோ ஒரு சுற்றுலா தளம் மட்டுமல்ல. எல்லோராவின் ஒவ்வொரு கல்வெட்டும் அந்த கால நினைவுகளின் நிகழ்கால சாட்சி. இந்த படத்தினில் தெரியும் யானைகளை கொஞ்சம் கவனிக்கவும். முதலில் அந்த காலத்தில் யானைகள் இருந்திருப்பது புரிகிறது. யானைகள் மனிதர்களுக்கு ஏதோ ஒரு வகையினில் நல்ல துணையாக இருந்திருக்க வேண்டும். இல்லையெனில் கோவில்களில் அவைகளின் படம் இடம் பிடித்திருக்க வாய்ப்பில்லை. யானைகளை அப்போது வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்தும் வித்தை தெரிந்தவர்களாக இருந்திருக்க வேண்டும்.**

ஒவ்வொரு யானையும் அழகாக செதுக்கப்பட்டு இருப்பதோடு ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையில் அழகான இடைவெளி விட்டு செதுக்கப்பட்டு இருக்கிறது. கண்கள் தும்பிக்கை காத்து மடல்கள் தந்தம் கால்கள் ...அனைத்தும் சரியான அளவுகளில் வரையப்பட்டு செதுக்கப்படிருக்க வேண்டும். மூலைப்பகுதியில் ஒரு யானையின் காத்து மடல் இன்னொரு யானையின் உடம்புப்பகுதியுடன் அழகாக முரண் அற்று இணைக்கப்பட்டு இருக்கிறது. எவ்வளவு கூர்மையான பார்வையை அப்போதைய மனிதர்கள் பெற்றிருந்திருக்க வேண்டும் !

இந்த சிற்பங்கள் சொல்வது என்ன ? மனித மூளை எல்லா கணிணிகளையும் விட சிறப்பானது. மனிதன் நினைத்தால் கிடைக்கும் எதையும் துணையாகக் கொண்டு சிற்பங்கள் ஓவியங்கள் தீட்ட முடியும். மனிதனின் மூளை இன்னும் முழுமையாக உபயோகப்படுத்தப்படவில்லை. மனிதன் இறப்பவன். மனிதன் ஏற்படுத்தும் கலைகள் இறப்பதில்லை !




**பதிவு 019:**

**அஜந்தா ஓவியங்கள் சொல்பவை என்ன ? அந்த கால ஓவியங்கள் சில விஷயங்களை சொல்லாமல் சொல்கின்றன. தலை சீவும் விதத்தில் இருந்து, கண்களில் இடும் மை, நெற்றி சுட்டிகள், இணைந்த புருவங்கள், கழுத்தினில் அணியும் மாலை, இடுப்பு ஒட்டியானங்கள், தோளில் அணியும் ஆபரணங்கள், சுத்தமாக மழிக்கப்பட்ட ஆண் முகம், துணிந்து நிற்கும் மார்பு பகுதி .... ஒரு ஓவியம்**

எத்தனை அந்த கால விஷயங்களுக்கு மௌன சாட்சியாக நிற்கிறது பாருங்கள் - அதுவும் காலங்களை கடந்து !

அஜந்தாவிற்கு நான் சென்ற போது முதல் ஓவியம் வரையப்பட்டிருக்கும் குகை மட்டுமே என்னுடைய ஒரு நாளை எடுத்து கொண்டது. பார்க்கவே ஒரு நாள் என்றால் எத்தனை நாள் வரைந்திருக்க வேண்டும் ! எத்தனை பேர் வரைந்து இருக்க வேண்டும் ! இருளில் ஓவியங்கள் இருந்தாலும் வெளிச்சங்கள் ஏற்படுத்தி பார்க்கும் அளவிற்கு செய்திருக்கிறார்கள். எந்த பக்கம் பார்த்தாலும் ஓவியங்கள். குகையின் மேல்புறம், கீழ்புறம், வலது இடது சுவர்கள் ... உள்ளே இருக்கும் போது நான் ஏதோ ஓவிய மேகங்களில் தவழ்வது போல் ஒரு சுகம் இருந்தது.

ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முந்தய ஓவியங்கள் என்கிறார்கள். இன்றைய டிஜிட்டல் உலகத்தினில் ஓவியர்கள் அடித்து செல்லப்பட்டது தெரிகிறது. எங்கோ ஒரு மூலையில் ஓவியக் கல்லூரிகள், பள்ளிகள், பட்டறைகள் நடைபெறுகின்றன. அநேகமாய் இங்கிருந்து நூறு வருடங்களுக்கு பிறகு ஓவியர்கள் இருக்க வாய்ப்பில்லை. அப்போதாவது அவர்களின் மதிப்பு உயரட்டும்.

எனது புதிய வீட்டின் ஒரு சுவரினை ஓவியத்தால் அழகு படுத்த எண்ணியுள்ளேன். அது ஓவியர்களுக்கு என்னால் முடிந்த ஒரு அங்கீகாரம். அதை புகைப்படம் எடுத்து அதைப் பற்றிய எண்ணங்களுடன் உங்களை சந்திக்கும் வரை உங்களிடம் இருந்து விடை பெறுகிறேன் !

நாளை உலக புகைப்பட தினம். இந்த பயணத்தினில் தான் புகைப்படத்துடன் கூடிய எண்ணங்களை பதிவு செய்ய வேண்டும் என தோன்றியது. பதிவு செய்தேன். இதற்கான வரவேற்ப்பு என்னை மீண்டும் எழுத சொல்கிறது. அடுத்த பயணம் தயாராக இருக்கிறது. இமயமலையில் சந்திப்போம் சிந்திப்போம் !